# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1933/32 - 2015 සැප්තැම්බර් මස 23 වැනි බදාදා - 2015.09.23

1933/32 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: PUT/LND/01/01/06.

புத்தளம் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் பம்பி இயக்குநர் களின் விடுதியின் பொருட்டு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கிறேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

புத்தளம் மாவட்டத்தின், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 617, B புத்தளம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மனல்குண்டுவ கிராமத்தில் அமைந்துள்ள புத்தளம் மாவட்ட நில அளவை அதிகாரியினால் 2012.11. 01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பு. 5040 ஆரம்ப நில வரைபடத்தில் துண்டிலக்கம் 2 என குறிப்பிடப்பட்டுள்ள 0.0074 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைக்குள் அமைந்துள்ள காணிப் பகுதி.

வடக்கு: பு. 5040 ஆரம்ப நில வரைபடத்தின் துண்டிலக்கம் 01 மற்றும் மனல்குண்டுத் தோட்டம் என்றழைக்கப் படும் காணி; கிழக்கு: நெடும்குளம் தோட்டம் என்றழைக்கப்படும் ஜும்மா பள்ளிவாசல் உரிமை கோரும் காணி; தெற்கு: நெடும்குளம் தோட்டம் என்றழைக்கப்படும் ஜும்மா பள்ளி வாசல் உரிமை கோரும் காணி மற்றும் நகர சபை வீதி; மேற்கு: நகர சபை வீதி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு புத்தளம் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். ஆர். எம். மலிக்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2015, செத்தெம்பர் 17.

10 - 412


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.